ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

அருத்தபஞ்சகம்

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

அருத்தபஞ்சகம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

‡ அமலன் அவியாத சுடர் ⋆
அளவில்லா ஆர் அமுதம் ⋆
அமல உருக் குணங்கள் ⋆
அணி ஆயுதங்கள் அடியவர்கள் ⋆⋆
அமல அழியாத நகர் ⋆
அழிந்தெழும் காவுடன் எல்லாம் ⋆
கமலையுடன் அரசாளும் ⋆
கரிகிரி மேல் காவலனே ॥ **1** ॥

உள்ள பொருள் அனைத்துக்கும் ⋆
உருவ நிலை கருமங்கள் ⋆
தெள் இசைவின் வசம் ஆக்கித் ⋆
திகழ்ந்துயிராய் உறைகின்றான் ⋆⋆
நள் இருள் தீர்த்தடியவர்க்கு ⋆
நலம் கொடுக்கும் திருவுடனே ⋆
வள்ளல் அருளாளர் எனும் ⋆
வாரண வெற்பிறையவனே ॥ **2** ॥

பூத உடல் புலன்கள் மனம் ⋆
புல்லாவி புந்தி எனும் ⋆
யாதும் அலனாய் இலகி ⋆
யான் எனும் இன் நுண் அறிவாய்ச் ⋆⋆
சேதனனாய் அடிமையுமாய் ⋆
உயிர்க்கெல்லாம் திண் உயிராய்த் ⋆
தீதல் இன்றித் திகழும் சீர் ⋆
அத்திகிரித் திருமாலே ॥ **3** ॥

தான் அடைத்த குணம் கருவி ⋆
தன் கிரிசை வழி ஒழுக்கி ⋆
ஊன் எடுத்துண்டுமிழ்ந்துழலும் ⋆
உயிர்க்கெல்லாம் உயிர் ஆகிக் ⋆⋆
கான் நடத்திக் கமலையுடன் ⋆
கண்டுகந்து விளையாடும் ⋆
தேன் எடுத்த சோலைகள் சூழ் ⋆
திரு அத்தி ஊரானே ॥ **4** ॥

உய்யும் உறவிசையாதே ⋆
ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப் ⋆
பொய் உருவைத் தமக்கேற்றிப் ⋆
புலன் கொண்ட பயனே கொண்டு ⋆⋆
ஐ உறவும் ஆர் இருளும் ⋆
அல்வழியும் அடைந்தவர்க்கு ⋆
மெய் அருள் செய்திடும் திருமால் ⋆
வேழ மலை மேயவனே ॥ **5** ॥

விதைமுளையின் நியாயத்தால் ⋆
அடி இல்லா வினை அடைவே ⋆
சதை உடல நால் வகைக்கும் ⋆
சரண் அளிப்பான் எனத் திகழ்ந்து ⋆⋆
பதவி அறியாது ⋆
பழம் பாழில் உழல்கின்றார்க்கும் ⋆
சிதைவில் அருள் தரும் திருமால் ⋆
திரு அத்தி நகரானே ॥ **6** ॥

எம நியம ஆசனங்கள் ⋆
இயல் ஆவி புலன் அடக்கம் ⋆
தமதறியும் தாரணைகள் ⋆
தாரை அறா நினைவொழுக்கம் ⋆⋆
சமம் உடைய சமாதி நலம் ⋆
சாதிப்பார்க்கிலக்காகும் ⋆
அமரர் தொழும் அத்திகிரி ⋆
அம்புயத்தாள் ஆர் அமுதே ॥ **7** ॥

புகல் உலகில் இல்லாது ⋆
பொன் அருள் கண்டுற்றவர்க்கும் ⋆
அகலகிலா அன்பர்க்கும் ⋆
அன்றே தன் அருள் கொடுத்துப் ⋆⋆
பகல் அதனால் பழம் கங்குல் ⋆
விடிவிக்கும் பங்கயத்தாள் ⋆
அகலகில்லேன் என்றுறையும் ⋆
அத்திகிரி அருள் முகிலே ॥ **8** ॥

இரு விலங்கு விடுத்து ⋆
இருந்த சிறை விடுத்தோர் நாடியினால் ⋆
கரு நிலங்கள் கடக்கும் வழி ⋆
காவலரால் கடத்துவித்துப் ⋆⋆
பெரு நிலம் கண்டுயிர் உணர்ந்து ⋆
பிரியாமல் அருள் செய்யும் ⋆
உரு நலம் கொண்டுறும் திருவோடு ⋆
உயர் அத்திகிரியானே ॥ **9** ॥

‡ தம் திருமாதுடனே தாம் ⋆
தனி அரசாய் உறைகின்ற ⋆
அந்தம் இல் பேர் இன்பத்தில் ⋆
அடியவரோடெமைச் சேர்த்து ⋆⋆
முந்தி இழந்தன எல்லாம் ⋆
முகிழ்க்கத் தந்தாட்கொள்ளும் ⋆
அந்தம் இலா அருள் ஆழி ⋆
அத்திகிரித் திருமாலே ॥ **10** ॥

‡ அயன் பணியும் அத்திகிரி ⋆
அருளாளர் அடி இணை மேல் ⋆
நயங்கள் செறி கச்சி நகர் ⋆
நான் மறையோர் நல் அருளால் ⋆⋆
பயன்கள் இவை அனைத்தும் எனப் ⋆
பண்டுரைத்தார் படி உரைத்த ⋆
வியன் கலைகள் ஈர் ஐந்தும் ⋆
வேதியர்கட்கினியனவே ॥ **11** ॥

அடிவரவு — அமலன் உள்ள பூத தானடை உய்யும் விதை எமநியம புகல்
இருவிலங்கு தந்திரு அயன் வரி

அருத்தபஞ்சகம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்